சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி, 153 வது வட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, 20 இடங்களில் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தி, 500 நபர்களுக்கு அறுசுவை உணவு காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் வட்டக் கழகச் செயலாளர் தி.சார்லஸ், அருணாச்சலம், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வை பொன் ராமாசாமி, ரவி, பிரதீப் நிகழ்ச்சி ஏற்பாடு செய்தனர்.

நாமக்கல்லில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள் நிகழ்ச்சி!

நாமக்கல், ஆக. 8 - தமிழ்நாட்டின் ஐந்து முறை முதலமைச்சராக வும், உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராகவும் விளங்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு நாளில் அவர்களின் நினைவை போற்றும் வகையில், நாமக்கல் மோகனூர் சாலையில் அமைந்துள்ள அண்ணா சிலையிலிருந்து பரமத்தி சாலையில் அமைந்துள்ள தலைவர் கலைஞர் அவர்களின் சிலை வரை நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் தலைமையில் அமைதி பேரணி சென்று தலைவர் கலைஞர் அவர்களின் திருஉருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் பெ. இராமலிங்கம், அவைத்தலைவர் மணிமாறன், நாமக்கல் மாநகர செயலாளர்கள் இராணா ஆர்.ஆனந்த், துணை மேயர் செ.பூபதி, அ.சிவக்குமார், மாநகராட்சி மேயர் கலாநிதி, முன்னாள் மாவட்ட பொறுப்பாளர் பார்.இளங்கோவன், ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், மாநில நிர்வாகிகள், முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், அனைத்து சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாநகர உறுப்பினர்கள், கிளை, வார்டு கழகச் செயலாளர்கள், பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள், கழக தொண்டர்கள் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின 7 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றிய பேரூர் திமுக சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு தினமான நேற்று ஒன்றிய செயலாளர் கெ.ஞானசேகரன், பேரூர் செயலாளர் பாரிவள்ளல், பேரூராட்சி தலைவர் எஸ். சசிகுமார் ஆகியோர் தலைவர் கலைஞர் அவர்களின் சிலைக்கும் திருவுருவப்படத்திற்கும் மலர் தூவி மரியாதை செலுத்தி 900 ஏழை எளியவர்களுக்கு உணவு வழங்கினர். அருகில் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

ஏழை - நடுத்தர மக்கள் பலனடையும் வகையில்

குறைந்த கட்டணத்தில் வந்தே மெட்ரோ இரயில்கள் இயக்கப்படுமா?

மாநிலங்களவையில் இரா.கிரிராஜன் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 8 - ஏழை மற்றும் நடுத்தர மக்கள் பலனடையும் வகையில் குறைந்த கட்டணத்தில் வந்தே மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுமா என மாநிலங்களவையில் ரயில்வே அமைச்சரிடம், தி.மு.க. எம்.பி. கிரிராஜன் கேள்வி எழுப்பினார்.

தற்போது நடைபெற்று வரும் நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடரில் பேசிய தி.மு.க. எம்.பி. இரா.கிரிராஜன், சென்னையிலிருந்து வேலூர், விழுப்புரம் உள்ளிட்ட பெருநகரங்களுக்கு வந்தே மெட்ரோ ரயில்களை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளதா? அவற்றை ஏழை மற்றும் நடுத்தர மக்கள் பயணிக்கும் வகையில் குறைந்த கட்டணத்தில் இயக்க திட்டம் உள்ளதா? நாடு முழுவதும் எத்தனை வந்தே பாரத் ரயில்கள் இயக்கப்படுகின்றன? என்ற கேள்விகளை ரயில்வே துறை அமைச்சரிடம் எழுப்பியிருந்தார்.

இதற்கு பதில் அளித்துள்ள இரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், இந்திய ரயில்வே துறையால் 4 நமோ பாரத் என பெயர் மாற்றப்பட்ட வந்தே மெட்ரோ விரைவு ரயில் சேவைகளும், 144 வந்தே பாரத் சேவைகள் செயல்பட்டு வருகின்றன என்றும் பதில் தெரிவித்துள்ளார். அவற்றில் 16 வந்தே பாரத் சேவைகள் தமிழ்நாட்டிலிருந்து இயக்கப்படுவதாகவும், அதன்மூலம் சென்னை, வேலூர், விழுப்புரம் உள்ளிட்ட பல்வேறு நிலையங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதாகவும் கூறியுள்ளார்.

புதிதாக நமோ பாரத் எனப்படும் வந்தே மெட்ரோ விரைவு ரயில் சேவைகளை அறிமுகப்படுத்துவது குறித்த கேள்விக்கு, மாநில எல்லைகளைத் தாண்டிச் செல்லும் போது, நெட்வொர்க் தேவைக்கேற்ப ரயில்கள் அறிமுகப்படுத்தப்படுவதாகவும், அவை போக்குவரத்து சாதகத்தன்மை, செயல்பாட்டு சாத்தியக் கூறு ஆகியவற்றுக்கு உட்பட்டு, இந்திய ரயில்வே செயல்படுத்தும் தொடர் செயல்முறையாகும் என்றும் ரயில்வே துறை அமைச்சர், தி.மு.க. எம்.பி. கிரிராஜனுக்கு பதிலளித்துள்ளார்.

மாற்றுத் திறனாளிகளுக்கு ஒன்றிய அரசின் பங்காக

மாதாந்திர உதவித் தொகையை ரூ.5000 ஆக உயர்த்தி வழங்க வேண்டும்!

மக்களவையில் தே.மலையரசன் பேச்சு!

புதுடெல்லி, ஆக. 8– மக்களவையில் கள்ளக் குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் பேசியதாவது:–

ஊனமுற்றோர் என்ற வார்த்தையை தமிழில் இருந்து நீக்கி மாற்றுத் திறனாளிகள் என்ற வார்த்தையை அகராதியி லிருந்து உருவாக்கி நடை முறைபடுத்திய உலகின் ஒப்பற்ற தமிழின தலைவர் கலைஞர் அவர்களை வணங்கி..... உள்ளாட்சியில் மாற்றுத் திறனாளிக்கு இட ஒதுக்கீடு அளித்த திராவிட மாடல் நாயகர் தமிழக முதல்வர் தளபதியார் அவர்களையும் வணங்கி எனது உரையை தொடங்கு கிறேன்.

மாற்றுத் திறனாளிகள் மாதாந்திர உதவித்தொகை ஒன்றிய அரசின் பங்காக 2012 முதல் தற்போது வரை இந்திராகாந்தி ஓய்வூதிய திட்டத்தின் கீழ் வெறும் ரூ.300/–மட்டுமே வழங்குகிறது. சமூகநீதி மற்றும் அதிகாரம் வழங்கல் அமைச்சகத்திடம் நியாய மான வகையில் நிலைக்குழு உதவி தொகையை உயர்த்த பரிந்துரைத்தும் ஒன்றிய பா.ஜ.க அரசு தற்போது வரை உயர்த்தவில்லை. எனவே ஒன்றிய அரசின் பங்காக ரூ.5000/– ஆக உதவித்தொகையை உயர்த்த வேண்டும்.

அதேபோல் 80% ஊனம் இருந்தால் தான் உதவித் தொகை என்ற தற்போதைய விதியை மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் சட்டம் 2016ன்படி 40% ஊனம் இருந்தாலே உதவித்தொகை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

18 வயது அடைந்தால் தான் உதவித்தொகை என்ற தற்போதைய விதியை மாற்றி அனைத்து வயதினருக்கும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு தே. மலையரசன் எம்.பி. பேசினார்.

கடலூர் மாவட்டத்தில் பள்ளித் தலைமையாசிரியர்களுடனான

மாநில அளவிலான அடைவுத் திறன் மீளாய்வுக் கூட்டம்!

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்றது!

கடலூர், ஆக. 8– பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் முன்னிலையில் கடலூர் மாவட்டம், குமராபுரம் கிருஷ்ணசாமி பொறியியல் கல்லூரி அரங்கத்தில் பள்ளி தலைமையாசிரியர்களுடனான மாநில அளவிலான அடைவுத் திறன் மீளாய்வுக்கூட்டம் நேற்று முன்தினம் (06.08.2025) நடைபெற்றது.

தொடர்ந்து, கடலூர் மஞ்சக்குப்பத்தில் அரசுப் பள்ளி மாணவ, மாணவியர்கள் தங்கிபயிலும் வண்ணம் ரூ.19.33 கோடி மதிப்பீட்டில் வகுப்பறைகள் மற்றும் மாணவ, மாணவியர்களுக்கென தனித்தனியான விடுதி வசதிகளுடன் கட்டடங்கள் கட்டப்பட்டு வருவதை பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கல்வி மற்றும் மருத்துவத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து பல்வேறு சிறப்புத் திட்டங்களை அறிவித்து அதனை கடைகோடி மக்களுக்கும் கொண்டுசேர்க்கும் வகையில் செயல்படுத்தி வருகிறார்கள். தமிழக மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு பொருளாதார ஏற்றத்தாழ்வின்றி உயர்தரமான கல்வியினை பயில வேண்டும் என்பதற்காகவும், மாணாக்கர்கள் கல்வி கற்பதற்கான சிறந்த சூழ்நிலைகளை ஏற்படுத்தி தரவேண்டும் என்பதற்காக இல்லம் தேடி கல்வி, எண்ணும் எழுத்தும் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை ஏற்படுத்தியுள்ளார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பள்ளி தலைமையாசிரியர்களுக்கான மாநில அளவிலான அடைவுத் திறன் தேர்வு குறித்து ஆய்வுக்கூட்டம் மேற்கொள்ளப்படுகிறது. அந்தவகையில் 20 மாவட்டங்களில் நிறைவு செய்து, இன்று 21ஆவது மாவட்டமாக கடலூர் மாவட்டத்தில் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. தமிழ்நாட்டில் உள்ள 9,80,340 பள்ளிகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி முன்னேற்ற அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்த மாநில அளவிலான அடைவுத் தேர்வின் அறிக்கை பள்ளி வாரியாக தனித்தனியாக வெளியிடப்பட்டுள்ளது. இப்பட்டியலில் கடலூர் மாவட்டத்தினை பொறுத்தவரை விருத்தாசலம், மங்களூர், அண்ணாகிராமம், குமராட்சி, பரங்கிப்பேட்டை வட்டாரங்களை சேர்ந்த பள்ளிகள் முன்னிலையில் உள்ளது. அடுத்த நிலையில் ஸ்ரீமுஷ்ணம், புவனகிரி, கீரப்பாளையம், கம்மாபுரம் ஆகிய வட்டாரங்களும், கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய வட்டாரங்களாக கடலூர், காட்டுமன்னார்கோயில், பண்ருட்டி, குறிஞ்சிப்பாடி ஆகியவை உள்ளன.

அரசு பள்ளி மாணவர்களுக்கு கற்றல் முறையாக ஆசிரியர் கற்றுக் கொடுத்தாரா என்பதை சோதிக்க ஒவ்வொரு ஆண்டும் அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு மாநில அளவிலான அடைவுத் (SLAS) தேர்வானது மாணவர்களுக்கு நடைபெறுகிறது. இந்த தேர்வில், மாணவர் பெறும் மதிப்பெண்ணை வைத்தே ஆசிரியரின் தரம் நிர்ணயம் செய்யப்படுகிறது. மாணவர்கள் எடுக்கும் மதிப்பெண் அடிப்படையில், சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் கற்றல் அடைவு திறன் பட்டியல் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படுவதுடன், பள்ளி அளவிலும் பட்டியல் வெளியிடப்படுகிறது. இதனால் அப்பள்ளியில் மாணவர்களின் கற்றல் திறன் குறித்தும், முன்னேற்றம் குறித்தும் தெரிந்துகொள்ளலாம்.

இத்தேர்வில் மாணவர்கள் நல்ல முறையில் மதிப்பெண் பெறுவதற்காக ஆசிரியர்கள் மேற்கொள்ளும் பயிற்சி, சிறப்பு வகுப்புகள் குறித்து தலைமையாசிரியர்கள் எடுத்துரைத்தனர்.

கடந்த ஆண்டு 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் கடலூர் மாவட்டமானது 10ஆவது இடம் பிடித்து முந்தைய ஆண்டுகளை காட்டிலும் முன்னேற்றமடைந்துள்ளது. அடுத்தவரும் தேர்வில் முதல் 5 இடங்களுக்குள் எடுக்க எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமன்றி "கோடையில் கற்றல் கொண்டாட்டம்" என அரசுப் பள்ளி மாணவர்களின் கோடை விடுமுறையினை பயனுள்ள வகையில் பல்வேறு திறன்களை வளர்த்திடும் வகையிலும், மற்ற மாவட்டத்திற்கு முன்னுதாரணமாகவும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சிறப்பாக மேற்கொண்டுள்ளார். தலைமையாசிரியர்கள் பள்ளி வளாகத்தினை தனது முழுக்கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள வேண்டும். ஆசிரியர்களுடன் அவ்வப்போது மாணவர்களின் கற்றல் திறன்களை மேம்படுத்துவது குறித்து ஆய்வுக்கூட்டங்கள் மேற்கொள்ள வேண்டும். தலைமையாசிரியர்கள் பள்ளிகளில் முறையாக வகுப்புகள் நடைபெறுவதை கண்காணித்திட வேண்டும். மேலும் தேவைக்கேற்ப வகுப்புகளை ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

கடலூர் மாவட்டத்தில் கடந்த கல்வியாண்டில் 12ஆம் வகுப்பில் அரசுப் பள்ளியில் பயின்ற 193 மாணவர்கள் முதன்மை கல்வி நிறுவனங்களில் உயர்கல்விக்காக சேர்ந்துள்ளனர். கடலூர் மாவட்டமானது மாநில அளவிலான அடைவுத் திறன் தேர்வில் இரண்டாமிடம் பெற்றுள்ளது. கடலூர் மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கும் விதமாக அமைந்துள்ளது. பள்ளி ஆசிரியர்கள் முன்னெடுப்பே இந்நிலைக்கு சாத்தியமானது. அனைத்து மாணவர்களுக்கும் சிறந்த கல்வியினை வழங்கிட தமிழக அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக செயலாற்றிட வேண்டும் என பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாநில பெற்றோர்–ஆசிரியர் கழக துணைத் தலைவர் முத்துக்குமார், பயிற்சி ஆட்சியர் மாலதி மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் எல்லப்பன், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் பழனி, மாவட்ட கல்வி அலுவலர்கள், தலைமையாசிரியர்கள், அலவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை தென்மேற்கு மாவட்ட மயிலாப்பூர் கிழக்கு – மேற்கு சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு சாந்தோம் காக்கும் கரங்களில் உள்ள ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவி மற்றும் அறுசுவை வழங்கும் நிகழ்ச்சி மாமன்ற உறுப்பினர் கிழக்குப் பகுதி அமைப்பாளர் அ.ரேவதி எம்.சி., மேற்கு பகுதி அமைப்பாளர் கவிதா குமரி முத்து ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. நலத்திட்ட உதவி மற்றும் அறுசுவை உணவு வழங்கினார். இதில் பகுதிச் செயலாளர்கள் எஸ்.முரளி, நந்தனம் கி.மதி, வட்டச் செயலாளர்கள் ஆ.தவனேசன், மா.பா.அன்பு, மாநில, மாவட்ட, பகுதி, மகளிர் அணி நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவு நாள் அமைதிப் பேரணி!

திருவுருவச் சிலைக்கு மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் மாலை அணிவித்து மரியாதை!

கன்னியாகுமரி, ஆக. 8– முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7வது ஆண்டு நினைவு நாளையொட்டி கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் அமைதி பேரணி தொடங்கி ஒழுகினசேரி, மாவட்ட தலைமைக் கழக அலுவலகத்திலுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முழு திருவுருவ வெண்கலச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நேற்று (07.08.2025 – வியாழக்கிழமை) காலை 9.00 மணிக்கு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் அமைதி பேரணி நாகர்கோவில், வடசேரி அறிஞர் அண்ணா சிலை அருகில் இருந்து தொடங்கி அறிஞர் அண்ணா விளையாட்டு அரங்கம், மணிமேடை சந்திப்பு, எஸ்.பி. அலுவலக சாலை, கட்டபொம்மன் சந்திப்பு, அவ்வை சண்முகம் சாலை வழியாக நாகர்கோவில், ஒழுகினசேரி தலைமைக் கழக அலுவலகம் வந்தடைந்தது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முழு திருவுருவ வெண்கலச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

பேரணியில் நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப. ஆனந்த் உட்பட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் மற்றும் பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு அனைவரும் மரியாதை செலுத்தினர்.

7-ஆம்ஆண்டு நினைவு தினம்! -விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

முத்தமிழ் அறிஞர் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை!

செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்! 1000 நபர்களுக்கு அறுசுவை உணவு!

செஞ்சி, ஆக 8- விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 7-ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி 1000நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞரின் 7வதுஆண்டு நினைவுதினம் அனுசரிக்கப்பட்டது.

இதை முன்னிட்டு செஞ்சி காந்தி பஜாரில் இருந்து அமைதி ஊர்வலம் தொடங்கியது.

விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற அமைதி ஊர்வ லத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ் செல்வன், செஞ்சி ஒன்றிய பெருந் தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, நகர செயலாளர் கார்த்திக் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அமைதி ஊர்வலமாக சென்று செஞ்சி கூட்ரோட்டில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர்.தொடர்ந்து 1000 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சியை அவர் தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் செஞ்சி பேரூராட்சி மன்றதுணைத் தலைவர் ராஜலட்சுமி செயல்மணி, அரசு வழக்கறிஞர் தமிழ்ச் செல்வி கர்ணன், கவுன்சிலர்கள், லட்சுமி வெங்கடேசன், அஞ்சலை நெடுஞ்செழியன், சீனிவாசன், சுமித்ரா சங்கர், பொன்னம்பலம், ஜான் பாஷா, சங்கர், புவனேஸ்வரி அண்ணாதுரை, மகாலட்சுமிகமலநாதன், நூர்ஜகான் ஜாபர், சிவகுமார், மோகன், தொண்டரணி பாஷா, நிர்வாகிகள், ஜே. எஸ்.சர்தார், அறிவழகன், ஜி.டி.தனசேகரன்.பொறியாளர் அணி துணை அமைப்பாளர் ரசூல் பாஷா, அன்பு செல்வன், மாணவரணி வினோத் மற்றும் பலர் பங்கேற்றனர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு 78 வது வட்டத்தில் அமைச்சர் பி.கே. சேகர் பாபு ஆலோசனைப்படி வட்டச் செயலாளர் சு. மனோகர் தலைமையில் அன்னாரின் திருவுருவ படத்திற்கு மரியாதை செலுத்தி பொது மக்களுக்கு உணவு வழங்கப்பட்டது. இதில் எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ. வேலு,தொகுதி பொறுப்பாளர்.பி.எம். யாழினி.மாவட்ட அமைப்பாளர் கலை இலக்கியப் பகுத்தறிவு ஜி.புரசை தாமோதரன் மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு மாவட்டப் பொறுப்பாளர் ஆர். டி.சேகர் எம்.எல்.ஏ. ஆலோசனைப்படி, பெரம்பூர் வடக்கு பகுதி, 35 வது வட்டம், மாவட்டப் பிரதிநிதி இ.சையத் அலிகான் நிகழ்ச்சி ஏற்பாட்டில் பகுதிச் செயலாளர் அ.முருகன், வட்டச் செயலாளர் எம். உமாபதி முன்னிலையில் முத்தமிழ் அறிஞர் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. உடன் ஜியாவுதீன், பி.செல்வராஜ், அ.சேக் அப்துல்லா, ஆசிரியர் அய்யனார், அ. இக்பால், தினேஷ்குமார், அப்துல் நசீர், சாதிக் பாஷா, வாகிதா உமர், பழக்கடை ஆயிசா, தொபிக், இர்பான், சாதிக், வரதராஜன், ஆனந்த், கபீர், ஏழுமலை, சுமையா பேகம், அசன், தங்கராஜ், ஆனந்தராஜ், சந்திரசேகர், பாலசுந்தரம், ஜெயா.ராஜசேகர், ஐயப்பன் மற்றும் பலர் உள்ளனர்.